உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தக்கட்டளை.

இஃது

தசாவதானம்

பேறை - ஜெகநாதப்பிள்ளையவர்கள்

பிரதம மாணாக்கராகிய

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரால்

இயற்றப்பட்டு,

புங்கத்தூர்

கந்தசாமிமுதலியாரவர்களால்

சென்னை:

ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பார்த்திப௵-கடகரவி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தக்கட்டளை

இஃது

தசாவதானம்

பேறை - ஜெகநாதப்பிள்ளையவர்கள்

பிரதம மாணாக்கராகிய

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரால்

இயற்றப்பட்டு,

புங்கத்தூர்

கந்தசாமிமுதலியாரவர்களால்

சென்னை:

ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பார்த்திப ௵-சடசரவி.

திருச்சிற்றம்பல

நூன் முகம்.

ஏகாம் பரசிவ யோகிக ளிணையடி
வாகாம் படியடி யேன்முடி யணிமுடி.

"ஒருமவே தாந்தமென் றுச்சியிற் பழுத்த-ஆரா வின்ப வருங்கனி பிழிந்த-சாரங் கொண்ட சைவசித்தா ந்த" சாத்திரங்களாகிய சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசமுதலிய ஞானநூல்கட்கு-அக த்தியர் வரத்தா லவனியில் வந்தே - அவரொரு கடலை யாசம னஞ்செயின் - நாமிரு கடலை மாந்துவ மென்னு வடமொழி தென்மொழி மகோததி பெருகித் - திராவி டபாடியந் திருவாய் மலர்ந்த - சிவஞான யோகிச்சுரர் முதலியோ ரருளிய வியாக்கியானங்களை யாதர வாக் கொண்டவற்றுள் வேண்டிய வாங்காங்கெடுத்துத் தொ குத்துச் சித்தாந்தக்கட்டளை யெனப் பெயரீட் டிக் - கற்பவற் கெளிதி னிற்புலப் படவே - சொற் றன னெளியேன் சோபான மாகப்-பேதந் தெரித்தும் அபேதந் தெரித்தும் பேதாபேதம் பெரிது தெரித்தும்

ஒருவனே அம்முறை யதிட்டித்து, அவ்வப் பெயர்பெற்று நிற்பன்.

படிகமானது பொன்மை நீலமுதலான பஞ்சவர்ணங்களுந் தன்னிடத்துப் பொருந்தினபோது தன்னிறத்தைக் காட்டாது அவற்றி னிறமாய் நிற்பதுபோல; பதி குணரூபமாயுடலிற்குந் தனது சத்தியிற் காணப்படு மப்பேதமெல்லாந் தானாகத்தோன்றி வேற்றுமையின்றி நிற்பன். இது பற்றித் தன்றன்மை வேறுபடான்.

நிமித்தகாரணனாகிய பதி முதற் காரணமாகிய மாயையினின்றும், துணைக்காரணமாகிய தனதுசத்தியாற் பிரபஞ்சத்தைச் சிருட்டித்தும், திதித்தும், சங்கரித்துந் தான் தாக்கற்று நிர்விகாரியாயிருப்பன். அது ஆதித்தன் சந்நிதானத்துத் தாமரைமலர்ந்தும், காந்தமணிலக் கக்கியும், சலம்வற்றியும் வருவனபோலும்.

* பசுவியல்பு.

ஆன்மாக்க ளிலக்கத்தினா லளவுபடுத்தற் கரியராய், ஒருகாலத்தினு மழியாதவராய், அஞ்ஞானமாகிய வாண

---

* பசு = ஆன்மா, பாசசம்பந்தம் பெற்றிருத்தலாற்பசு.

வமலத்தின் மறைப்புண்டு கிடந்து, தத்தமக் குண்டான புண்யபாவங்களுக் கிடானதோ ருடலைக் கடவுளின் காருண்யத்தினுலே பொருந்தி, அவனவனுவாகிய வுடம்பென்னத் தானென்னத் தோன்றுமற் பிறிவற்றுநின்று, அவ்வுடம்போடு கூடுகையி லெண்ணிறந்த போகங்களை முயற்சியாற்புசித்து, அந்தந்தப் புசிப்பாலுண்டாகிய விதாகிதங்களினுலே மீளவும் புண்ணியபாவங்களை யார்ச்சித்துக்கொண்டவற்ருலிறந்துபிறந்துவருவர். இத்தகையோர் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலரென மூவகைப்பட்டிருப்பர்.

விஞ்ஞானகலர்,

அட்டவித்தியேசுரர், அணுசதாசிவர், சத்தகோடி மகாமந்திர ரென மூவகையர். இவர்கள் முறையே மயேசுரதத்துவத்திலும், சாதாக்கிய தத்துவத்திலும், சுத்தவித்தியா தத்துவத்திலுமிருப்பர். இவர்கள் ஆணவமல மொன்றினையுடையவர்கள். இவர்கட்குத்தனுகரணபுவனபோகம் சுத்தமாயையாம். இவர்களில் பக்குவர்க்குப் பதி அறிவிலே தன்மைமாத்திரையாய் நின்று திருவருளை யுதிப்பித்து மலத்தைப்போக்கி யிரட்சிப்பன்.

பிரளயாகலர்,

நூற்றுப்பதினெட்டு ருத்திரர்களாம். இவர்கள் ஆணவம், கன்மமென்னு மிரண்டுமலத்தையுடையவர்கள். இவர்கட்குத் தனுகரணபுவனபோகம் சுத்தமாயையாம். இவர்களில் பக்குவர்க்குப் பதி மான்மழு சதுர்புய காளகண்ட திரிநேத்திர தாரியாகச் சுபாவ வருட்டிருமேனிகொண்டெழுந்தருளி முன்னிலைமாத்திரையாய் நின்று மலத்தைப்போக்கியிரட்சிப்பன்.

சகலர்,

பிரம விஷ்ணு முதல் * பிபீலிகையீறாக விருப்பவர்கள். இவர்கள் ஆணவம், கன்மம், மாயையென்னு மும்மலமுமுடையவர்கள். இவர்கட்குப் பரசரீர மூன்று, சூக்கும சரீரமொன்று, தூலசரீரமொன்று. வருமாறு: அசுத்தமாயையில் அநந்ததேவராற்கலக்குண்டபாகமாகியகாரணசரீர மென்னும் பரசரீரமொன்று, இது ஆநந்தமயகோசமென்னப்படும்; வித்தியாதத்துவங்களாகிய பஞ்சகஞ்சுக மென்னும் சரீரமொன்று, இதுவிஞ்ஞானமய கோசமென்னப்படும்; பஞ்சகஞ்சுகத்திலொன்றாகிய கலையிற்றோன்றிய அவியத்தவியத்த

---

* பிபீலிகை=எறும்பு.

ரூபமாகிய குணசரீரமென்னும் பரசரீரமொன்று, இது மனோமய கோசமென்னப்படும்; மனம் புத்தியகங்காரம் தன்மாத்திரையைந்துமாகிய சமூகம் சூக்குமசரீரம்; இது புரியட்டகமெனவும், பிராணமயகோசமெனவும் படும்; ஏனையதூலசரீரம், இது அன்னமயகோசமென்னப்படும். இவ்வாறு புருடனொருவனே ஐந்துசரீரங்களோடுங்கூடி வினைக்கீடாகப் பிறப் பிறப்படைவன்.

இவர்கட்குத் தூலதனு அண்டசம், சுவேதசம், உத்பிச்சம், சராயுசம், என்கிற நால்வகைத் தோற்றத்தில், சுரர் - ௧௧-லட்சம், நரர்-௯-லட்சம், மிருகம் - ௧௦ - லட்சம், தாவரம்-௧௪-லட்சம், பறவை-௧௦-லட்சம், நீர்வாழ்வன-௧௦-லட்சம், ஊர்வன-௧௫ லட்சம் ஆகிய வெழுவகைப் பிறப்பும், ௮௪-லட்சயோனிபேதமாம். இவை யாவும் பிரகிருதியில். இவருள் பக்குவருக்கு * இரு

---

* இருவினையொப்பு=நல்வினையினுந் தீவினையிலும் விருப்பு வெறுப்பின்றிக்காண்டல். மலபரிபாகம்-மலம்=ஆணவமலம், பரி=உபசர்க்கம், பாகம்=திரிவுகெடுதல்; ஆன்மாவிற்குப் பக்குவம் வந்தவிடத்து மலசத்தி ஆன்மஞானத்தை மறையாதிருத்தல், சத்திநிபாதம்:—சத்தி=சிவசத்தி, நி=உபசர்க்கம், பாதம்=பதிதல்; மலம் நீங்கியவழி சிவசத்தி பதிதல்.

வினையொப்பு மலபரிபாகமுண்டாகச் சத்திநிபாதம் விளைந்தவழி மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோலக் கடவுள் மானிடச்சட்டை சாத்திக்கொண்டு குரு மூர்த்தமாயெழுந்தருளி மந்ததரம், மந்தம், தீவரம், தீவரதர மறிந்து சமயதீட்சைபண்ணி, சரியையனுட் டிப்பித்து, விசேடதீட்சை செய்து கிரியாயோகங் களை யனுட்டிப்பித்து, நிருவாண தீட்சைபுரிந்து ஞா னமனுக்கிரகித்து, மும்மலங்களைநீக்க, ஆன்மாக்கள் அழிந்தார்களுமில்லையாய், அந்தச் சிவமுதலானார்களு மில்லையாய், சிவமுதலின்றிக் காரியப்பட்டார்களுமில் லையாய், அம்முதலுக்கு வேருயிருந்தார்களுமில்லையாய், கேவல விசிட்ட மறுதலை ஆபாசாத்துவிதங்களைக் கட ந்து, அப்பதியோடு சுத்தாத்வித நிலையினையடைவர்.

பாசவியல்பு.

பாச மைந்துவகைப்படும். அவையாவன:—அறியா மைமிகவுண்டாம்படி யான்மாக்டோறுஞ் சகசமா யனுதியாயிருக்கும் ஆணவமலமொன்று; இந்த வாண வமலத்தோடுங் கூடிநின்று அதுபக்குவமாமளவு மான் மாவை மறைத்து அந்த மலத்தைப் பாகம்வருவிக்கின்ற

திரோதமலமொன்று; ஆன்மாக்களுக்குத் தனுவாதிகளைக் கொடுத்து மயக்கத்தைச் செய்யும் மாயாகாரணமலமொன்று; ஆன்மாக்களோடும் விரிந்தனுபவமாய் நிற்குங் கன்மமலமொன்று; ஆன்மாக்களின் சுகதுக்கவிளைவுகட்கெல்லாம் இடமாய் நின்று அவற்றின் அறிவு, இச்சை, செயல்களை ஏகதேசப்படுத்து மாயாகாரியமாகிய மாயேயமலமொன்று.

* ஆணவமலம்.

எண்ணிறந்த வான்மாக்களோடுங்கூடி நின்று மறைத்துந் தானொன்றாயிருப்பதாய், ஆன்மாக்களுடைய பக்குவாபக்குவங்கட்குத் தக்கதாக வவ்வரவரிடங்களிலே மறைந்து நின்று, அந்த வான்மபோதங்களின் மீட்சியிலே நீங்குவதாயிருக்கிற தன்காரியமான வெண்ணிறந்த சத்திகளையுடையதாய், செறிந்த விருளென்னும்படி நின்று ஆன்மாக்களுக்கு மிக்கமறைப்புகள்செய்வதாய், செம்பினுடன் கூடியிருக்கப்பட்ட காளிதமான தந்தச்

---

* ஆன்மாக்களை யணுத்தன்மைசெய்தலி னாணவமெனப்பெயர்பெறும். ஆணவம் சடமாகலி னதற்குச் செய்தியுண்டோ? விடம், கள், பாடாணம், தீ, காற்று, நீர் முதலிய சடங்கட்குச் செய்தியுண்டானாற்போலும்.

செம்புள்ளவன்றே யதனை மறைத்துள்ளும் புறம்புங்கலந்து வெட்டுவாய்தோறும் நின்றாற்போல, ஆன்மபோதத்தோடுங்கலந்து மறைந்து கேவலத்தில் ஆவாரகசத்தியானும், சகலத்தில் அதோ நியாமிக சத்தியானும், அஞ்ஞான நிகழ்ச்சிக்குக் காரணமாய்நின்ற வநாதிமலமாய், ஆன்மாவினிச்சா ஞானக்கிரியைகள் சற்றுஞ் சிவியாதபடி மறைத்துநிற்கும்.

திரோதானமலம்.

ஆணவமலம் நசிக்கும்படி பதியினுடைய அருட்சத்தியானது அந்தவாணவமலத்தோடுங்கூடித் திரோபவித்து நின்று காரியப்படுத்துகையால் மூலமலமெனவுபசரிக்கப்பட்டுத் திரோதமாய்நின்று காரியப்படுத்திமலபாகம் வருத்தின வருளானது அவர்களிடத்துக் கிருபை சனித்துப் பதியோடிரண்டறப் பொருந்துமுறைமையை யுண்டாக்கும்.

மாயாமலம்.

மலகன்மங்களோடு விரவாது சுத்தகாரியப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாயிருப்பது சுத்தமாயை; இம்

மாயையின்கீழா யடங்கி, மலகன்மங்களோடு விரவிச், சுந்தாசுத்த காரியப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமா யிருப்பது அசுத்தமாயை; இவ்வசுத்தமாயையின் தூல பரிணாமமா யசுத்தகாரியப் பிரபஞ்சத்திற்கு முதற்கார ணமா யிருப்பது பிரகிருதிமாயை. ஆக மூன்றும் இவ ற்றிற்கு முறையே விந்து, மோகினி, மானென்றுஞ் சொ ல்லப்படும்.

சுத்தமாயையின்றோற்றம்.

பதியினுடைய சத்தியாற் குடிலையாகிய சுத்தமாயை யிலே (சர்வான்மாக்களுக்கு மறிவை யெழுப்புவித்து நிற்கிற ஞானமாகிய) நாதத்துவந் தோன்றும்; நாதத் திலே (சர்வான்மாக்களுக்கு முண்டாகிய தொழிலை யெழுப்புவித்து நிற்கிற) விந்துதத்துவந் தோன்றும்; விந்துவிலே (நாதவிந்துக்க ளிரண்டுங்கூடின வவசர மாகிய) சாதாக்கிய தத்துவந்தோன்றும்; சாதாக்கி யத்திலே (கிரியையேறி ஞானங்குறைந்து நின்ற வவ சரமாகிய) ஈச்சுரதத்துவந் தோன்றும்; ஈச்சுர தத்து வத்திலே (ஞானமேறிக் கிரியைகுறைந்து நின்ற வவ சரமாகிய) சுத்தவித்தைதோன்றும்; இந்தத்தத்துவங்க

லைந்துந் தோன்றின வொழுங்கிலே தத்துவகர்த்தாக்கள் முறையே சிவம், சத்தி, சதாசிவம், மகேச்சரம், உருத்திரன் ஆகிய ஐவருந்தோன்றியவற்றோடு பொருந்தி நிற்பார்கள். மேற்சொன்னவிந்துவிலே சூக்குமை பைசந்தி, மத்திமை, வைகரியென்னும் வாக்குகள் நான்கும்; ஐம்பத்தோரக்கரங்களும், எண்பத்தொரு பதங்களும், சத்தகோடி மகாமந்திரங்களும், வேதாகமபுராண சாத்திரங்களும்; விஞ்ஞானகலர், பிரளயாகலர் தங்கட்குத் தனுகரணபுவன போகங்களும், பதமுத்திகளும், பஞ்சகலைகளும் தோன்றும்.

அசுத்தமாயை.

அசுத்த மாயையானது நாசமில்லாததாய், உருவமில்லாததாய், ஒன்றாய், சகல சகத்திற்குமொரு காரணமாய், சடமாய், சர்வவியாபியாய், பதிக்குப்பரிக்கிரக சத்தியாய், ஆன்மாக்களுக்குத் தனுகரண முண்டாக்குவதாய், மலங்களி லொன்றாய், விபரீத வுணர்வைச் செய்வதாய் உள்ளது.

அசுத்தமாயையின் றோற்றம்.

அசுத்தமாயையில், காலமும், நியதியும், கலையுந் தோன்றும்; கலையில் வித்தைதோன்றும்; வித்தையில்

ராகந்தோன்றும்; ஆகவிவ்வைந்துங்கூடிப் பஞ்சகஞ்சுக மாம். இவற்றோடுங் கூடியவான்மா பஞ்சகஞ்சுகனும். கலையிலே மூலப்பகுதி அவியத்தகுணவடிவாய்த்தோன்றித்தன்கணின்றும்வியத்தமாய்த் தரப்படும் குணதத்துவம், சாத்துவிதம், இராசதம், தாமதமெனமுக்குணங்கள் தோன்றும். அவற்றுளொவ்வொன்று மூத்திறப்பட்டு ஒன்பதுவகையாம். அவ்வியத்தமாகிய பிரகிருதியில் பஞ்சகிலேசமுமுண்டாம். இம்முக்குணத்தில் ஒருகுணமேறினவிடம் புத்தி. புத்தியில் ஆங்காரந்தோன்றும். இவ்வாங்காரந் தைசதம், வைகரி, பூதாதியென மூன்றும். தைசதவாங்காரஞ் சாத்துவித குணத்தைப் பொருந்தில் மனமும், ஞானேந்திரிய மைந்துந் தோன்றும். வைகரியாங்காரம்ராசத குணத்தைப்பொருந்தில் கன்மேந்திரிய மைந்துந் தோன்றும். பூதாதியாங்காரம் தாமதகுணத்தைப்பொருந்தில் தன்மாத்திரைகளைந்துந் தோன்றும். இவ்வைந்தினும் பூதங்களைந்துந் தோன்றும். இவ்வைந்தினும் பஞ்சதேவர்கள் பொருந்துவர்.

பிரகிருதி தத்துவத்திலான்ம தத்துவ மிருபத்துநாலுந் தோன்றும்.

கன்மமலம்.

ஆன்மாக்களெடுக்கப்பட்ட உடம்புகளுக்கு மூன்னிலை காரணமாய், பலவிதமான புசிப்புக்களையுண்டாக்குவதாய், சனநமரணத்தையுண்டாக்குவதாய், பலபேதங்களாயிருப்பதாய், ஆன்மாக்களோடுஞ்சென்று பொருந்துவதாய், மனத்தினாலும் வாக்கினாலும் காயத்தினாலுஞ் செய்யப்படு மியல்பினையுடையதாய், புத்தியிலே நிற்பதாய், இருவினையான புண்ணியபாவங்களாய், சங்காரகாலத்து மாயாகாரணத்திலே சென்று பொருந்தும். இது நல்லசாதி, தீயசாதி, தீர்க்காயுள், அற்பவாயுள்; நல்லபோகம், பொல்லாப்போகம்; என மூன்று விதமாம். இக்கன்மங்கள் மூன்று மோரான்மாவிலே யநாதியே கூடியுள்ளனவாம். இப்புசிப்பு ஊழ்வினையாலல்லதுண்டாகாது; அது முன்பார்ச்சித்தவொழுங்கிலேயும் † வன்மை மென்மைகளுக்கிடாயும் வரும். இக்கன்மம் சூக்குமகன்மம், அதிசூக்கும கன்மம், தூல

† ஒருவன பளம்வித்தை பண்ணிலே நட்டான், பின்புதெங்குவைத்தான், பின்பு கத்திரிநட்டான், பின்பு கீரைவிதைத்தான், கீரை பதினைந்துநாளிலும், கத்திரி யொருமாதத்திலேயும், தெங்கைந்துவருடத்திலேயும், பனை முப்பதுவருடத்திலேயும் பலனைகொடுப்பதுபோல.

கன்மமென மூன்றும். அவைமுறையே சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியமுமாம்.

சஞ்சிதம்.

அநாதி தொடுத்துச் சநநந்தோறுமார்ச்சித்த வினை புசித்து மிஞ்சியது, * ஆறத்துவாவிலேயும் கட்டுப்பட்டிருப்பது. பயிர்வினைஞ னொருவன்தன் முயற்சியால் விளைந்ததானியத்தைச் சேர்ப்பித்திருக்கும் நெற்களஞ்சியம்போலும்.

பிராரத்துவம்.

சஞ்சிதத்திலே சிறிது புசிக்கப்பட்டவினை யொருசரீரத்தை யெடுப்பித்துச்சாதி, ஆயுள், போகம், கொடுக்கும். களஞ்சியத்திலிருந்து தானியத்தை யெடுத்தனுபவித்து வருதல்போலும்.

ஆகாமியம்.

பிராரத்துவம்புசிக்கையில்வந்தேறுகிற புண்ணியபாவங்கள். அவைபாவன மனோவாக்குக் காயங்களினாற் செய்யப்படும் நற்றொழிலுந் தீத்தொழிலுமாம். களஞ்

* கலாத்துவா, புவனத்துவா, வன்னத்துவா, பதாத்துவா, தத்துவாத்துவா.

சியத்தினின்று மெடுத்தனுபவித்துவருங்கால் மறுபடியும் களஞ்சியங் குறையாவண்ணம் விளைத்துப் பூர்த்தி பண்ணிக்கொள்வதுபோலும்.

மேற்சொன்ன பிராரத்துவம் ஆதிதெய்வீகம், ஆதிபௌதிகம், ஆதியான்மீகமென மூன்றும்.

ஆதிதெய்வீகம்.

மாதாவின் கருப்பத்திலிருக்குமிடத்துண்டான வேதனம், பின் சநநம், நரை, திரை, யமதண்டம், நரகவேதனை முதலிய.

ஆதிபௌதிகம்.

குளிர், வெப்பம், மழை, காற்று, மின், இடி, சுவர் விழுதல், கல்விழுதல் முதலிய.

ஆதியான்மீகம்.

தத்தஞ் சரீரத்திலுண்டான வியாதிகளினாலும், மிருகங்களினாலும், இராசாங்கத்தாலும், பசாசுகளாலும், கள்வராலும், மனிதராலும், உண்டாகுந்துக்கம். பிறருடைய கல்வியும், சௌந்தரியமும், செல்வமுங் கண்டு பொறாமைகொள்ளல், அபிமானங்கெடுதல், எழுந்தது புத்தியாகச்செய்தல், கோபித்தல், முதலிய.

மாயேயமலம்.

ஆன்மாக்களுக்கு மலத்தால் விழுங்கப்பட்ட ஞானங் கிரியைகளை வெளிப்படுத்தும்பொருட்டும், தாஞ்செய் தவினைகளை யனுபவித்தொழிக்கும்பொருட்டும், இன் றியமையாத தனுகரணபுவனபோகங்கள் காரியப்படு மவசரத்து முற்கூறிய அசுத்த மாயா கரணத்திலே நின்று சிவசத்திகள் அவற்றைத் தோற்றுவிக்க அவற் றோடும் பொருந்தி நடத்தப்பட்ட சுத்த மாயையின்றி ரட்சியாகியசுத்ததத்துவங்களாம்.

சுத்த தத்துவங்களை மலமென்னலாமோவெனில், எனலாம். சிவனுடைய அருட்சத்தியானது திரோத மாய்நின்று மலத்தைக் காரியப்படுத்த அதை மலமென உபசரித்தாற்போலும்.

இதுகாறுங்கூறிய ஆணவம், திரோதானகாரி, மாயை, கன்மம், மாயேய மென்னுமிப்பஞ்ச மலங்களை ஆன்மாபொருந்திநின்று பிறப்பிலும் இருப்பிலும் இற ப்பிலும்,தங்கிப் பூமி, பாதாளம், சுவர்க்கமென்னு மூன் றுலகத்தும்கொள்ளிவட்டம் போலும், காற்றாடிபோ லும், நிமிடத்திலலைந்து சிவாஞ்ஞைப்படிநடப்பன்.

தத்துவம்.

ஆன்மதத்துவம்-உச.

பூதம்-ரு-பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்.

ஞானேந்திரியம்-ரு-சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்நுவை, ஆக்கிராணம்.

தன்மாத்திரை-ரு-சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்,

கன்மேந்திரியம்-ரு-வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.

அந்தக்கரணம்-ச-மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

வித்தியாதத்துவம்-எ.

காலம், நியதி, வித்தை, கலை, ராகம், புருடன், மாயை.

சுத்ததத்துவம்-ரு.

சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம்.

ஆக உட்கருவிகள்-௩௬.

பிருதிவியின்கூறு-ரு-மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை.

அப்புவின்கூறு - ரு - நீர், உதிரம், சுக்கிலம், மூளை மச்சை.

தேயுவின்கூறு.ரு-ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல்.

வாயுவின்கூறு-ரு-ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல்.

ஆகாயத்தின்கூறு-ரு-குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம்.

பிருதிவியின்வழிநாடி-க0-இடைகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புருடன், சங்குனி, வைரவன், குகுதை.

வாயுவின்வழிநாடி.க0-பிராணன், அபானன், உதானன் வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்சயன்.

ஆகாயத்தின்வழியோடணை-ங-அருத்தவேடணை, புத்திரவேடணை, உலகவேடணை.

வாக்காதியின்வழிதொழில்-ரு-வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்.

பிரகிருதியின்வழிகுணம்-ங- சாத்துவிதம், இராசதம், தாமதம்.

விந்துவின்வழிவாக்கு-ச-சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி.

ஆக-புறக்கருவிகள்-கூ0.

ஆகத் தத்துவங்கள் - கூசு.

தத்துவத்தொழில்.

வடிவு.

பிருதிவிநாற்கோணம், அப்பு அர்த்தசந்திரன், தேயு முக்கோணம், வாயு அறுகோணம், ஆகாயம்வட்டம்.

நிறம்.

பிருதிவிபொன், அப்புவெண்மை, தேயுசிகப்பு, வாயுகருமை, ஆகாயம்புகை.

குறி.

பிருதிவிக்கு வச்சிரம், அப்புவுக்குத்தாமரை, தேயுவுக்கு அசுவத்திகம், வாயுவுக்கு அறுபுள்ளி, ஆகாயத்திற்கு அமுதவிந்து.

தெய்வம்.

பிருதிவிக்குப் பிரமன், அப்புவுக்கு விண்டு, தேயுவுக்கு உருத்திரன், வாயுவுக்கு மகேசன், ஆகாயத்திற்குச் சதாசிவன்.

குணம்.

பிருதிவிகடினம், அப்புநெகிழ்வு, தேயு சுடுகை, வாயு திரட்டல், ஆகாயம் நிரந்தரம்.

ஞானேந்திரியங்களின் றொழில்.

சோத்திரம் - ஆகாயத்தினிடமாக நின்று செவியைப் பொருந்தி சத்தத்தையறியும்.

தொக்கு - வாயுவினிடமாகநின்று சரீரத்தைப்பொருந்தி பரிசத்தையறியும்.

சட்சு-தேயுவினிடமாகநின்று கண்ணைப்பொருந்தி ரூபத்தைக் காணும்.

சிங்ஙுவை - அப்புவினிடமாகநின்று நாவைப்பொருந்தி ரசத்தையறியும்.

ஆக்கிராணம் - பிருதுவியினிடமாக நின்று மூக்கைப் பொருந்திக் கந்தத்தையறியும்.

கன்மேந்திரியங்களின் றொழில்.

வாக்கு-ஆகாயத்தினிடமாகநின்று வசனிக்கும்.

பாதம்-வாயுவினிடமாகநின்று கமனிக்கும்.

பாணி-தேயுவினிடமாக நின்று இடுதலேற்றலைச் செய்யும்.

பாயுரு-அப்புவினிடமாகநின்று மலசலத்தைக் கழிக்கும்.

உபத்தம்-பிருதிவியினிடமாகநின்றுச் சுக்கிலத்தைக் கழிக்கும்.

தன்மாத்திரைகளின் றொழில்.

சத்தாதிகளைந்தும் சோத்திராதிகளுக்கு விடையமாயிருக்கும்.

அந்தக்கரணங்களின்றொழில்.

மனம்பற்றும், புத்திநிச்சயிக்கும், சித்தம் சிந்திக்கும், ஆங்காரங்கொண்டெழுப்பும்.

வித்தியாதத்துவங்களின் றொழில்.

காலம்-கழிகாலத்தெல்லையையும், நிகழ்காலத்துப்பலத்

தையும், எதிர்காலத்துப் புதுமையையும் பொ
ருத்துவிக்கும்.

நியதி - எந்தக்காலமும் கன்மத்தை யிவ்வளவென்று
நிச்சயம்பண்ணி நிறுத்தும்.

கலை - ஆணவத்தைச் சிறிது நீக்கி யான்மாவுக்குக் கிரி
யையெழுப்பும்.

வித்தை - ஆன்மாவுக்குச் சீக்கிரத்திலே யறிவையெழு
ப்பும்.

அராகம் - பெற்றபதார்த்தங்களைச் சிறிதாக்கி பெறாத
திலே யிச்சையுண்டாக்கும்.

புருடன்-கலையாதி பஞ்சகஞ்சுகத்துடனேகூடிச் சத்தா
திவிடயங்களை நுகரு மவசரம்.

மாயை-ஒன்றை நினைக்கவொட்டாமல் மயக்கத்தைச்
செயும்.

சுத்த தத்துவங்களின் றொழில்.

கக-வது பக்கம் சுத்தமாயையின்றோற்றத்தைக்காண்க.

பிருதிவியின்வழிநாடிகளின்றொழில்.

இடைகலை இடதுமூக்கில் நிற்கும், பிங்கலை வலது
மூக்கில் நிற்கும், சுழுமுனை மத்தியில்நிற்கும், காந்தாரி

கண்ணில் நிற்கும், அத்திவுடலெங்கும் நிற்கும், சிகுவைதாலுவில் நிற்கும், அலம்புருடன் செவியினிற்கும், வைரவன் பாதத்தினிற்கும், சங்குனிகழுத்தினிற்கும், குகுதைமார்பினிற்கும்.

வாயுவின் வழிநாடிகளின் றொழில்.

பிராணன் மூலாதாரத்திற்றோன்றி இடை பிங்கலையாகவேறிக் கபாலத்தளவுஞ்சென்று நாசியில்-கஉ-அங்குலம் பிறப்பட்டு-ச-அங்குலம் வெளிபோய், அ-அங்குலமுள்ளடங்கும். இவ்வாறு ஒருநாளைக்கு - உசா000- சுவாசம் நடக்கும். இதில்-எஉ00-பாழ்போய், கசச00- சுவாசமுள்ளடங்கும். அபானன் - குதத்தினின்று மலசலங்களைக்கழிப்பிக்கும்; உதானன்-விக்கலிருமல் அவத்தைப்பண்ணுவிக்கும் ; வியானன் - உண்டவன்னசாரத்தை-எஉ000 - நாடிகளிலும் கலப்பிக்கும் ; சமானன் - யாவையும் சமன்பண்ணும் ; நாகன் - இருமல் தும்மலுண்டாக்கும் ; கூர்மன் - கண்ணெற்றல்செயும், கிருதரன் - சோம்பல், கோட்டாவியுண்டாக்கும்; தேவதத்தன் - இமைக்கும் ; நகைப்பிக்கும் ; தனஞ்செயன்

உடம்பை வீங்கவும் விரியவும்செய்து கபாலத்தை வெடிப்பித்துப்போகும்.

ஏடணைகளின் றொழில்.

அருத்தவேடணை - திரவியமுதலியவற்றால் வரும் பிணக்கு; புத்திரவேடணை - புத்திரன்முதலிய சுற்றத்தாரால் வரும்பிணக்கு; உலகவேடணை - உலகமுதலிய சங்கத்தால்வரும் பிணக்கு.

குணங்களின் றொழில்.

சாத்துவிதம்-தவம், சமம், கல்வி, சௌரியம், பொறுமை, கிருபை, சந்தோஷம், அறிவு, அடக்கம், முதலிய.

தாமதம்-மந்தம், கோள்; அகௌரவம், நித்திரை, மதம், மச்சரம், அதன்மம், அறியாமை, சோம்பல், முதலிய.

இராசதம்-சௌரியம், உச்சாகம், அபிமானம், கிருபையின்மை, இடும்பை முதலிய.

வாக்குகளின் றொழில்.

வைகரி.

வைகரியென்னும் வாக்கு செவியாற்கேட்கப்படுவதாய், அருத்தத்தோடு கூடியதாய், உதானவாயு உந்தி

யடியாய்த் தோன்றித் தலையையுமிடற்றையும் நெஞ்சையும் பொருந்துதலாலுண்டாகிய வட்சரங்களை விபரீதமறக் கிரமமாகவுடைத்தாய், புந்தியையறிகாரணமாயுள்ளதாய் பிராணவாயுவைப்பொருந்தி வெளியேபுறப்பட்டுக் காரியப்படும்.

மத்திமை.

மத்திமையென்னும் வாக்குகண்டத்தினுள்ளோ சவிகற்பமாயுணரத்தக்க வோசையாகி, செவிக்கு விடையமாகாமல், பிராணவாயுவின் விருத்தியைப்பொருந்தாமல், தெளிவாகிய வக்கரங்களைச் சொல்லுஞ் செயலில்லாது, வைகரிக்கு வேறாய் மெள்ளவெழுந்திடும்.

பைசந்தி.

பைசந்திவாக்கானது வைகரியில் ஒன்றோடொன்றெவ்வாத வடிவினையுடையதாய், வேறுபட்ட வன்னங்கள் தோற்றுதலை முறையேயொடுக்கி தானே விளங்குவதாய், மயிலின் முட்டைதரிக்கும் சலத்தையொத்து நினைவுமாத்திரையாய் நிற்பது.

சூக்குமை.

சூக்குமைவாக்கானது பரசரீரத்தினுள்ளாக நாதமாத்திரையாய் விளங்குதலும், ஞானமாத்திரைக் கேது

வாகிய விலக்கணத்தையுடையது. சில சுத்தமாயாரூப மாய்க் கேடின்றி நிலைபெறுவது. இதனையுள்ளபடி காணப்பெறுவார்க்குச் சுத்த மாயாபுவனத்தின் கண்ணதாகிய அபரமுத்திப்பெரும் போகமுண்டாகும்.

இந்த வாக்கு நான்குந் தோன்றுகைக்குக் காரணமாயிருக்கின்றபஞ்சமையென்றொருவாக்குண்டு;இதற்குத் தானம் மூலாதாரம், அது பிரணவசொரூபம். இந்தவைந்துவாக்குகளும் நிவிர்த்திமுதலிய பஞ்சகலைகள் பற்றுக்கோடாகச் சார்ந்து சிவசத்திகளாற் காரியப்படுத்தப்பட்டு சிவதத்துவமுதலிய பஞ்சதத்துவங்களிலிருக்கும்.

இன்றியமையாதறியவேண்டிய தத்துவங்களின் றொழில்களைமாத்திர மீண்டுக் கூறினும்.

பஞ்சகலைகள்.

நிவர்த்திகலை-தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுடைய சங்கறபநிவர்த்தி செய்கையாம்.

பிரதிட்டாகலை-தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுக்கு முன்சொன்ன சங்கற்பம் விடுதி நிலைபெற்றுத்திடமாகப் பிரதிட்டிக்கையாம்.

வித்தியாகலை-தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுக்குச் சங்கற்பவிடுதிநிலைபெற்றுத் திடமானதாய்த்திற்சர்வார்த்த ஞானம் பிரகாசிப்பிக்கையாம்.

சாந்திகலை-தன்னிடத்தில் பொருந்தினவான்மாக்களுக்குச் சர்வார்த்தஞானப் பிரகாசத்தால் இராகதுவேஷமின்றி யிருக்கை.

சாந்தியாதீதகலை - தன்னிற்பொருந்தின ஆன்மாக்களுக்கு விகற்பஞானஞ் சாந்தமானதென்கிற மூன்னிலையுங்கழிந்து அதீதமாய்ப் பரமாகச் சொரூபமாய் நிற்கை.

இவ்வைந்து கலைகளுள்மந்திரங்கள், பதங்கள், அட்சரங்கள், புவனங்கள்,தத்துவங்கள்,விரவியிருத்தலைவிரிவுநூலிற்காண்க.

ஆறுதாரம்

மூலாதாரம்-குதத்திற்கும் கோசத்திற்கும் நடு,முக்கோணம், நாலிதழ்க்கமலம், மாணிக்கநிறம், கணபதி குண்டலிசத்தி, ஓங்காரம்.

சுவாதிட்டானம்-கோசத்திற்கும் நாபிக்கும் நடு,நாற்சதுரம், ஆறிதழ்க்கமலம், செம்பொன்னிறம், பிரம்மா சரஸ்வதி, நகாரம்.

மணிபூரகம்-நாபிகமலம், மூன்றாம்பிறை, பத்திதழ்க் கமலம், மரகதநிறம், விஷ்ணு லட்சுமி, மகாரம்.

அநாகதம்-இருதயகமலம், பன்னிரண்டிதழ்கமலம், முக்கோணம், ஸ்படிகநிறம்-உருத்திரன்பார்வதி, சிகாரம்.

விசுத்தி-கண்டத்தானம்-பதினாறிதழ்க்கமலம், அறுகோணம், மேகநிறம், மகேஸ்வரன் மகேஸ்வரி, வகாரம்

ஆஞ்ஞை-லலாடத்தானம் மூன்றிதழ்க்கமலம், வட்டம் படிகநிறம், சதாசிவம் மனோன்மணி, யகாரம்.

மண்டலம்.

சந்திரமண்டலம்-மூலாதாரந்தொடங்கி ஓவ்வொரெழுத்தை முன்னிட்டுக்கொண்டு சிரசுநடுவில் கோடி சூரியர் உதையமானாற்போலபிரகாசிக்கும் இந்த அமிர்தகலை அக்கினிமண்டலத்தை நோக்கிச்சோதியாய் நிற்கும்.

ஆதித்தமண்டலம்-இருதயகமலத்தில் அறுகோணமாய் எட்டிதழுடைய ஒருபுஷ்பமாயிருக்கும். இது வாழைப்பூப்போல் கீழ்நோக்கியிருக்கும்.

அக்கினிமண்டலம் பிருதிவும் அப்புங்கூடின விடத்தில் நாற்சதுரமாய் நடுவே முக்கோணமாய் நாலிதழுடைய ஒரு புஷ்பமாயிருக்கும்.

அவத்தை.

தத்துவங்களோடு ஆன்மாபொருந்திக் கன்மம் புசிக்கிறபோது கீழாலவத்தை-௫. மத்தியாவத்தை-௫-சுத்தாவத்தை-௫. காரணாவத்தை-௩. ஆக ௧௮ அவத்தைகளைப் பெறுவன்.

கீழாலவத்தை.

இது கேவலாவத்தையின்காரியம்.

சாக்கிரம் - தத்துவம் - ௩௫ - ல். ஞானேந்திரியம் - ௫. கன்மேந்திரியம் - ௫. தன்மாத்திரை - ௫. வசனாதி - ௫. வாயு - ௧௦. புருடன் - ௧. அந்தக்கரணம் ௪. ஆக - ௩௫. கருவிகளுடன் ஆன்மாலலாடதானத்தில் நின்றவவசரம்.

சொப்பனம் - முன்சொன்னவற்றுள் ஞானேந்திரியம், கன்மேந்திரியம், நீங்கலாக மற்ற - ௨௫. கருவிகளுடன் ஆன்மாகண்டத்தில் நின்றவவசரம்.

சுழுத்தி - புருடன் - ௧. அந்தக்கரணம் நான்கில் சித்தம் - ௧. வாயுபத்தில் பிராணவாயு - ௧. ஆக மூன்றுகருவிகளுடன் ஆன்மா இருதயத்தில் நின்றவவசரம்.

துரியம் - பிராணவாயுவும் புருடனுமாகிய விரண்டுகருவிகளுடன் ஆன்மா நாபித்தானத்து நின்ற வவசரம்.

துரியாதீதம் - புருடனேடு மூலாதாரத்தில் நின்ற வவசரம்.

மத்தியாவத்தை.

இது சகலாவத்தையின்காரியம்.

சாக்கிரதுரியாதீதம்-ஒருபண்டத்தைமறந்தவ னந்தப்பண்டங்காணுதபோதுபிராணவாயுவுமியங்காமல்சிவதத்துவமொன்றுடன்மூர்ச்சித்திருந்த வவசரம்.

சாக்கிரதுரியம் - அந்தப்பிராணவாயு வியங்கத்தக்கதாகப் பெருமூச்செறிந்து சிவதத்துவம், சத்திதத்துவங்களுடன், விசாரித்தறிவோமென்ற வவசரம்.

சாக்கிரசுழுத்தி - அவ்விடத்திலல்லவோ போனோமெ ன்று சிவம், சத்தி, சாதாக்கிய தத்துவங்களுடன் நினைவெழுந்த வவசரம்.

சாக்கிரசொப்பனம் - இன்னவிடத்தில் பண்டம்வைத் தோமெனச் சிவம், சத்தி, சாதாக்கியம், ஈச்சுரதத் த்துவங்களோடு விசாரப்பட்ட வவசரம்.

சாக்கிரசாக்கிரம் - அந்தப்பண்டம் வைத்தவிடத்திலே சென்று சுத்த தத்துவமைந்துடன் கண்ட வவ சரம்.

நின்மலாவத்தை.

இது சுத்தாவத்தையின்காரியம்.

நின்மலசாக்கிரம்-ஆசாரியராலேஞானதீட்சைபெற்றுத் திரிபதார்த்தவுண்மை அறிந்து, சிந்தித்து, தெ ளிந்து கருவிகள்நீங்க விசாரித்து நிற்பது.

நின்மலசொப்பனம் - கருவிகள்நீங்கியும் நீங்காமலும் நடுவேசற்றுப் பதைப்புண்டாவது.

நின்மலசுழுத்தி - தத்துவம்நீங்கி மேலான கேவலந் தானாய்நிற்பது.

நின்மலதுரியம் - கேவலம்நீங்கி அருளினாலே தன்னையுங்கண்டு அருளையுங் கண்டு அவ்வசத்தாய் நிற்பது.

நின்மலதுரியாதீதம்-சிவத்தைத் தரிசித்துச் சிவானந்தத்தழுந்துதல்.

கேவலாவத்தை.

சர்வசங்காரகாலத்து ஆன்மாக்கள் சுத்த மாயாகாரணத்திலே யொடுங்கிச் சிருட்டிகாலமளவும் ஆணவமலத்தான் மறைப்புண்டு கலையாதி தத்துவங்களோடுங் கூடாமல் யாதொரு நினைவுமின்றி யிருப்பது. இது கண்ணானது இரவின் இருளிலே வொளிகெடாமல் விழித்திருப்பதுபோலும்.

சகலாவத்தை.

சிருட்டிதொடங்கிச் சர்வசங்காரமளவும் ஆன்மாக்கள் தத்துவம் முப்பத்தாறோடுங்கூடி எண்பத்துநூறாயிரம் யோனிபேதங்களிலும் பிறந் திறந் துழல்வது. இது இரவின்இருளி லழுந்திக்கிடந்தகண் விளக்கினாலே யிருள்நீங்கிப் பலபதார்த்தங்களைக் காண்டல்போலும்.

சுத்தாவத்தை.

ஆன்மாக்கள் கேவல சகலப்பட்டுப் பிறந்திறந்து திரியு மவசரத்து அவர்கட்கு இருவினையொப்பும், சத்திநிபாதமும், குருவருளும், ஞானசாதனமும், மும்மலக்கழிவும், வாதனை நீக்கமும், ஞானப் பெருக்கமும் முறையே உண்டாகப்பெற்றுத் திருவருளைக் கூடுவது. இது இரவில் இருளோடும் விளக்கோடுங் கூடியிருந்த கண்ணானது ஆதித்தனுதயஞ் செய்தவிடத்து அதன் கிரணத்தா லாதித்தனைக் காண்டல்போலும்.

மார்க்கங்கள்.

சன்மார்க்கம், சகமார்க்கம், புத்திரமார்க்கம், தாசமார்க்கமென நால்வகைகளாம். இவ்ற்றை ஞானம், யோகம், கிரியை, சரியையென்றுஞ் சொல்லுவர். இவற்றால் முறையே வரு முத்தி சிவசாயுச்சியம், சிவசாரூபம் சிவசாமீபம் சிவசாலோகமாம்.

தாசமார்க்கம்.

சிவபெருமானது திருக்கோயிலில் திருவலகிடுதல், திருமெழுக்குச் சாத்துதல், மலர்கொய்தல், அம்மலர்களைத் தார், மாலை, கண்ணியென்னும் பகுப்பினவாகச்

சமைத்தல், ஸ்ரீகண்ட பரமேஸ்வரன் கல்யாணசுந்தர குணங்களைப் புகழ்ந்துபாடுதல், திருவிளக்கிடுதல், திருநந்தீவன மூண்டுபண்ணுதல், சிவனடியார் திருவேடத்தைக்காணின் எதிர்சென்று ஏதேனுமடியேனாலாகவேண்டிய பணியாதோவென வினவி யவற்றைச் செய்தல் முதலியவாம்.

புத்திரமார்க்கம்.

அன்றெடுத்த மணமுள்ள புதியமலர், தூபதீபங்கள், திருமஞ்சனம், திருவமுது முதலிய திரவியங்களைச் சேகரித்து, பூதசுத்திமுதலிய பஞ்சசுத்திகளையுஞ் செய்து, ஆசனம்பூசித்து, அதன்மேல் வித்தியாதேகமாகிய மூர்த்தியைக் கற்பித்து, அதில் மூர்த்திமானாகிய சுத்தசிவத்தைத் தியானித்து, ஆவாகித்துச், சுத்தமான பத்தியினால் ஏகாக்கிரமனத்தோடுபசரித்துப், பிரார்த்தித்துத், தோத்திரஞ்செய்து விருப்பதோடு அக்கினிகாரிய மியற்றிவருதல் முதலியவாம்.

சகமார்க்கம்.

பஞ்சேந்திரியங்களை யொடுக்கி ரேசகபூரக வாயுக்களைத்தடுத்துக் கும்பித்திருந்து பிராணவாயுவைச் சுழு

முனையினிறுத்தித் தனது சரீரத்துள்ளே ஆருதாரங்களையறிந்து அவற்றில பத்மதளம், அதிதேவதை, அக்கரங்களாகிய பொருளையறிந்து தியானித்து மூலாதாரத்தில் அக்கினியைச் சொலிப்பித்து நாபித்தானத்திற் குண்டலிசத்திச் சொரூபமாயிருக்கும், அமுதத்தையுருகப்பண்ணி மற்றைய வாதாரங்களி லதோமுகமான பதுமங்களை அதனைக்கொண்டு பேதித்து மேலே சென்று விந்து தானத்தின் வழியேயிறங்கி பெருகுகின்ற வமுததாரையைத் தனதுடலமுற்றும் நிறையச்செய்து முழுச்சோதியானச் சிவத்தியானத் திருப்பது முதலியவாம்.

சன்மார்க்கம்.

வேதங்கள், சாத்திரங்கள், புராணங்கள், கலைஞானங்கள், சமயசாத்திரங்கள் இவைபலவும் கற்றுணர்ந்து புறச்சமயங்களில் பலவாகச் சொல்லப்பட்டிருக்கிற யாவையையும் பூர்வபட்சம்செய்து மேலான பதிபசு பாசமாகிய ஞானத்தால் ஞாதுரு, ஞான, ஞேயங்கள் பொருந்தாதவண்ணம், பதியோடு கலக்கத்தக்க ஞானத்தைப்பெறுவது.

நியமங்கள்.

இடம்-கங்கை, குமரிமுதலிய புண்ணியதீர்த்தங்களையும், காசி, காஞ்சி திருவம்பல முதலான சிவத்தானங்களையும் நாடியிருக்கை.

காலம்-விஷுசு, அயனம், சங்கிரமமுதலாயுள்ள காலங்களிலே செய்யுங் கிரமங்கள்.

திக்கு-இன்னமந்திர மின்னதிசையைப்பார்த்துச் செபிக்கலாமென்னுமுறைமைகள்.

ஆசனம் - பதுமாதனம், கூர்மாதனமுதலாயுள்ள வாதனங்களிட்டிருக்கை.

குலம்-ஆதிசைவர்முதல் பஞ்சமரீறாகிய குலநீதிமுதலாயுள்ளவை.

குணம்-அவரவர் சீலத்திலொழுகுதல் பிறரை நிந்தியாமை, புறங்கூறாமைமுதலிய.

சீர்-அந்தந்தச்சாதிவொழுங்குகுலையாமல் நடக்கை.

விரதம்-கொல்லாவிரதம், அஷ்டவிரதமுதலிய.

சீலம்-சாதித்தொழில், குணத்தொழில், பொறையுடைமை, அருளுடைமை முதலிய.

தவம்-பஞ்சாக்கினிநடு, சலத்திநடுசெயுந்தவங்கள்.
செபம்-தேவதைமந்திரங்கள் சத்திமந்திரங்கள்முதலிய.
தியானம்-ஆதாரம், நிராதாரமுதலியதியானங்கள்.

பஞ்சாக்கரவுண்மை.

சிவபெருமானுடைய திருநாமமாகிய நமச்சிவாயவென்ற ஐந்தட்சரங்களில் நகாரத்திற் திரோதசத்தியும், மகாரத்தில் மலமும், சிகாரததிற் சிவமும், வகாரத்தில் அருளும், யகாரத்தில் ஆன்மாவும் நிற்கும். இவ்வைந்தும் பதி, பசு, பாச மூன்றிலடங்கும், எங்ஙனமெனின்? சிவ்வும், வவ்வும், நவ்வும் பதியின் கூறுகிய சிவத்திலும், அருளிலும், திரோதசத்தியிலுமடங்கும், யகரம் பசுவிலடங்கும், மகரம் பாசத்திலடங்கும். அஞ்ஞானமாகிய மலமும், அதனோடுகூடியிருக்கப்பட்ட திரோதானசத்தியும் ஆன்மாவை பொருந்தாமனீங்கும்படி சிவமுன்னாகவுச்சரித்தால் திரோதமொருபாலும், அருளும் சிவமுமொருபாலும், முன்பின்சூழ்ந்து நிற்க நடுநின்றது ஆன்மா. அப்போது நவ்வாகிய திரோதசத்தியும் மவ்வாகிய மலத்தின் மேலீட்டை நீக்கியருளாக நின்று பிரகாசிக்கும். மலத்தினின்று மீளவிட்ட வவ்வாகியவருள்

சிவ்வாகிய சிவத்தையுந் தாராநிற்கும். பின்பு மல பாகம் வந்த யவ்வாகிய ஆன்மா வகாரமாகிய அருள் தாரகமாகச்சென்று அந்தச் சிகாரமாகிய சிவத்தோடுங் கூடி யிரண்டற நின்றனுபவிக்கும்.

பஞ்சசுத்தி.

பூதசுத்தி-முப்பத்தாறு தத்துவங்கள் நாமல்ல அவை யாவும் சடம் அவையுந் தானகக் காரியப்படமா ட்டாதெனவறிகை.

ஆன்மசுத்தி-அப்படியறிவது திருவருளாலன்றி ஆன்ம போதத்தாலல்லவென வறிகை.

திரவியசுத்தி - ஆன்மபோதத்தாற்றுனே யறிகைக்குச் சேட்டையில்லையென்று கண்டது கொண்டே ஆன்மாவுக்கறிவில்லையென வறிந்து கண்டு கேட் டுண்டுயிர்த்துற்றறிவதெல்லாம் திருவருளென்றறி கை.

மந்திரசுத்தி - ஐந்தெழுத்தைச் சிகாரமுதலாக மாறி யதன் உண்மை விசாரித்தறிகை.

இலிங்கசுத்தி-பதியெங்கும் பூரணமாய் பசுபாசங்களிர ண்டினும் பிரிவறநின்று அவற்றைச் சேட்டிப்

பித்து நின்ற தன்மையறிந்து அத்தகைய சிவம் இலிங்கததினு மெழுந்தருளி யிருக்குமென வறி கை.

சத்திநிபாதம்.

மந்ததரம்-நமக்குப் பேருயுள்ள வொருபதிவுண்டென் றறிவெழுந்திருக்கை. அது வாழைத்தண்டிலே நெருப்புப்பற்றினாற்போலும்.

மந்தம் - அப்பதியை யடைவதற்கு வழியெப்படியென் றாராய்கை. அது பச்சைவிறகிலே நெருப்புப்பற் றினாற்போலும்.

தீவிரம் - அப்படி யாராய்ந்தறிந்த பதியை யடைவதற் குப் பிரபஞ்சத்தைவெறுத்து புளியம்பழமுமதே னோடும் போல்நிற்றல். அது உலர்ந்த விறகிலே நெருப்புப் பற்றினாற்போலும்.

தீவிரதரம்-பிரபஞ்சத்தை முற்றத்துறந்து ஆசாரியனே பொருளெனக்கண்டு வழிபடுகை. அது கரியிலே நெருப்புப்பற்றினாற்போலும்.

தீட்சைகள்.

ஆசாரியன் பாசவிமோசனம் பண்ணும்படி ஆன்மாக்களுக்குச் செய்யும் தீட்சைகள் சாதிபேத முதலியவற்றால் பலவிதமாம் வருமாறு:—

நயனதீட்சை-மீன்தனது சினையைக்கண்ணால் பார்த்த மாத்திரத்தா லிரட்சிப்பதுபோல ஆசாரியன் நயனத்தால் கடாட்சித் தனுக்கிரகிப்பது.

பரிசதீட்சை-கோழியானது தனது சினையைச் சிறகாற் றழுவிக் காத்தல்போல தனது கரத்தால் தொட்டனுக்கிரகிப்பது.

மானசதீட்சை- ஆமையானது தனதுசினையை நினைத்தன்மாத்திரத்தா லிரட்சிப்பதுபோ லனுக்கிரகிப்பது.

வாசகதீட்சை-பஞ்சாட்சரோப தேசத்தா லனுக்கிரகிப்பது.

சாத்திரதீட்சை-ஆகமார்த்தங்களைப் போதிப்பது.

யோகதீட்சை-யோகமார்க்கத்தால் சீடனது இருதயத்திற்சென்றனுகிரக்கிப்பது.

ஆத்துமசுத்தியாவது - பெத்தத்தினு முத்தியினுஞ் சிவனுபகரிக் கிறுமென்று தன்னுடைய சுதந்தர ஆனியை யறிந்து சிவஞானத்திலே யழுந்தல்.

சிவரூபமாவது - ஆணவமலத்திலே கிடக்கிறவான்மாவைச் சிவன் பஞ்சகிருத்தியங்களைச்செய்து மலங்களைநீக்கி மோட்சத்திலே விடுவனென்று திடமா யறிதல்.

சிவதரிசனமாவது - சிவன் செய்யும் பஞ்சகிருத்தியத்தை ஆன்மா செய்யானென்றறிந்து ஆன்மாவைத் தரிசிப்பித்து நின்ற ஞானம்.

சிவயோகமாவது - சிவசத்திசெய்யுங் கிருத்தியமெல்லாம் சிவனுக்குச் சற்றுமில்லையென்றறிந்து சிவசத்தியையன்றி தனக்கும் பிறருக்குஞ் சற்றுஞ் செய்தியில்லையென்று தெரிந்து திருவருளோ டழுந்துதல்

சிவபோகமாவது - சிவத்தோ டிரண்டற நின்று சிவானந்தத்தைப் பொசித்துவருதல்.

சித்தாந்தக்கட்டளை சம்பூரணம்.

சிவார்ப்பணம்.

உ

சிவமயம்.

பிரகடனம்.

	தபாற்கூலியுள்பட ரூ.	அ.	ப.
காஞ்சிப்புராணம்.	2	0	0
திருக்கழுக்குன்றப்புராணம் உரையுடன்.	0	12	0
திருவிரிஞ்சைப்புராணம் உரையுடன்.	0	8	0
சுந்தரமூர்த்திசுவாமிகள்தேவாரம்.	0	12	0
தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையருரை.	0	12	0
கொலைமறுத்தல் உரையுடன்.	0	4	0
திருமுருகாற்றுப்படை உரையுடன்.	0	3	0
கல்லாடமூலம்	0	2	0
இலக்கணச் சுருக்கம் (மத்தியதரபாடசாலைக்கு)	0	5	0
கந்தரநுபூதிஅலங்காரம்.	0	1	6
சித்தாந்தக்கட்டளை.	0	1	6
திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்.	0	1	6
சடாட்சரமாறல் (யந்திரத்துடன்)	0	2	0
கந்தரந்தாதி மூலம்.	0	1	0
விநாயகர் அகவல்.	0	0	9
சுப்பிரமணியர் விருத்தம்.	0	0	9
விவேகசிந்தாமணி (சுத்தப்பிரதி)	0	1	0
சிவஞானபோதம் உரையுடன்.	1	0	0
வடதிருமுல்லைவாயிலந்தாதி.	0	1	6
இடும்பன்கவசம் கடம்பன்கவசம்.	0	1	0

ஐந்துபுத்தகம் ஏககாலத்தில்வாங்கினால் ஒரு புத்தகம் அதிகங்கொடுக்கப்படும்.

புங்கத்தூர்-கந்தசாமி முதலியார்
33 - சுப்பிரமணியமுதலியார் வீதி
பெத்துநாயக்கன்பேட்டை சென்னை